அரசு பலவகை தொழில் நுட்பக் கல்லூரி, கெலமங்கலம்
கிருஷ்ணகிரி மாவட்டம் –635 113

---

**மேற்குறிப்பாணை எண்.மூ.மு.387/ஏ–1/2024 நாள் 06.02.2024**

**பொருள்:** நிர்வாகம் – அரசு பலவகை தொழில் நுட்பக் கல்லூரி, கெலமங்கலம், கிருஷ்ணகிரி மாவட்டம் – முனைவர் பட்டம் பெற்றமைக்கு முன் ஊக்க ஊதிய உயர்வுகள் – வழங்கப்பட்டது / இரத்து செய்யப்பட்டது தெளிவுரைகள் – வழங்குதல் – தொடர்பாக.

**பார்வை:** சென்னை, தொழில் நுட்பக் கல்வி ஆணையரின் மேற்குறிப்பாணை எண்.18533/சி4/2020, நாள் 22.01.2024 உடன் பெறப்பட்ட அரசு கடித எண்.4413/சி1/2021–1,நாள் 05.01.2024.

---

பார்வையில் காணும் மேற்குறிப்பாணை தகவலுக்காக இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

**இணைப்பு : மேற்கூறியவை**

ஒம்/–ஐ.செல்வகுமார்
முதல்வரின் நேர்முக உதவியாளர்

**பெறுநர்**

அனைத்து துறைத்தலைவர்கள் / விரிவுரையாளர்கள்,
அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி,
கெலமங்கலம் – 635 113,
கிருஷ்ணகிரி மாவட்டம். ) பயிலக வாட்ஸ்ஆப் குழு மூலம்.

**நகல்** முதல்வர் மேஜைக்கு

**நகல்** துணை முதல்வர்

**நகல்** முதல்வரின் நேர்முக உதவியாளர்

**நகல்** பொருளாளர்

**நகல்** கண்காணிப்பாளர் (நிர்வாகம் மற்றும் கணக்குகள்)

**நகல்** இணையதள பொறுப்பாசிரியர் ) இணையதளத்தில் அரசாணைவகைப்பாட்டின் கீழ் பதிவேற்றம் செய்யும் பொருட்டு அனுப்பப்படுகிறது

**நகல்** ஏ –1 இருப்பு கோப்பு

**நகல்** உதிரி

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

8/2/24
**கண்காணிப்பாளர்**
6.2.24

# தொழில் நுட்பக் கல்வி இயக்ககம், சென்னை – 600 025

**மேற்குறிப்பாணை எண்.18533 / சி4 / 2020, நாள்.22.01.2024**

பொருள்: நிருவாகம் – தொழில் நுட்பக் கல்வி – அரசு நிதியுதவி பெறும் பாலிடெக்னிக் கல்லூரிகள் – முனைவர் பட்டம் பெற்றமைக்கு முன் ஊக்க ஊதிய உயர்வுகள் – வழங்கப்பட்டது / இரத்து செய்யப்பட்டது – தெளிவுரை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை: அரசு கடித எண்.4413/சி1/2021–1, நாள்.05.01.2024.

-^-^-^-^-

பார்வையில் காணும் அரசு கடித நகல் தகவலுக்காகவும், தக்க மேல்நடவடிக்கைகாகவும் இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது.

இணைப்பு: மேற்படி.

தொழில் நுட்பக் கல்வி ஆணையருக்காக.

22/01/2024

பெறுநர்:

முனைவர் ஆர். மல்லிகா, முதல்வர்,
பெரியார் நூற்றாண்டு பாலிடெக்னிக் கல்லூரி,
வல்லம் – 613 403. தஞ்சாவூர்.

நகல்:

| | |
|---|---|
| 1. அனைத்து அரசு / அரசு நிதியுதவி பெறும் பொறியியற் கல்லூரிகள்,<br>அனைத்து அரசு / அரசு நிதியுதவி பெறும் பாலிடெக்னிக் கல்லூரிகள்<br>மற்றும் சிறப்பு பயிலக முதல்வர்கள் / முதல்வர் (பொறுப்பு) | கல்லூரியில் பணிபுரியும் அனைத்து ஆசிரியர்களுக்கும் சுற்றுக்கு விடவும். |

2. ஆணையரின் மேசைக்கு
3. கூடுதல் இயக்குநர் (பாலி)
4. கூடுதல் இயக்குநர் ( தேர்வுகள்)
5. துணை இயக்குநர் (நிருவாகம்)
6. நிதி ஆலோசகர் மற்றும் தலைமை கணக்கு அலுவலர்
7. உதவி இயக்குநர் (நிருவாகம்)
8. இயக்குநரின் நேர்முக உதவியாளர்
9. மு.நே.உ., (சட்டம்)
10. ஏ, பி, சி, டி, எஸ் பிரிவு கண்காணிப்பாளர்கள்
11. சி1, சி2, சி3 இருக்கைக்கு.
12. தொகுப்புக் கோப்பு

CH

உயர்கல்வி (சி1) த் துறை,
தலைமைச் செயலகம்
சென்னை – 600009.

**கடித எண் 4413/சி1/2021-1, நாள் 05.01.2024.**

தொழில்நுட்பக் கல்வி இய
10 JAN 2024
சென்னை – 600 025

அனுப்புநர்
திரு.ஆ. கார்த்திக், இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

000965

பெறுநர்
தொழில்நுட்பக் கல்வி ஆணையர்
சென்னை – 600 025.

ஐயா,

பொருள்: உயர்கல்வி - தொழில்நுட்பக் கல்வி – அரசு மற்றும் அரசு உதவி பெறும் பாலிடெக்னிக் கல்லூரிகள் – முதல்வர்கள் முனைவர் பட்டம் பெற்றமைக்கான முன் ஊக்க ஊதிய உயர்வு பெறுதல் மற்றும் தஞ்சாவூர், பெரியார் நூற்றாண்டு பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர் முனைவர் ஆர். மல்லிகா, முனைவர் பட்டம் பெற்றமைக்கு முன் ஊக்க ஊதிய உயர்வுகள் வழங்கப்பட்டதை ரத்து செய்யப்பட்டதற்கான தெளிவுரை வழங்குவது - தொடர்பாக.

பார்வை:
1. தொழில்நுட்பக் கல்வி ஆணையரின் செயல்முறை ஆணை எண்.3811/ சி4/2010, நாள் 24.02.2011.
2. தொழில்நுட்பக் கல்வி இயக்குநரின் செயல்முறை ஆணை எண்.12235/ சி4/2019, நாள் 25.05.2019.
3. முதல்வர், பெரியார் நூற்றாண்டு பாலிடெக்னிக் கல்லூரி, கடித எண்.361/பி1/2020, நாள் 11.02.2021.
4. அரசு கடித எண்.4413/சி1/2021-1, உயர்கல்வித் (சி1) துறை, நாள் 24.03.2021.
5. தஞ்சாவூர், பெரியார் நூற்றாண்டு பாலிடெக்னிக் கல்லூரியில் முதல்வராகப் பணியாற்றி வரும் முனைவர் ஆர்.மல்லிகா, அவர்கள் உயர்நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கு எண் 16129/2023-ல் வழங்கப்பட்ட தீர்ப்பு, நாள் 24.05.2023.
6. தொழில்நுட்பக் கல்வி இயக்குநரின் கடித எண்.18533/ சி4/2020, நாள் 15.11.2021, 21.09.2022 மற்றும் 05.07.2023.

---------

பார்வையில் காணும் கடிதங்கள் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பாணையின் மீது தங்களது கவனம் ஈர்க்கப்படுகிறது.

2. தஞ்சாவூர், பெரியார் நூற்றாண்டு பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர் முனைவர் ஆர். மல்லிகா, அவர்கள், Ph.D., உயர்கல்வித் தகுதி பெற்றமைக்கு ஊக்க ஊதியம் கோரி, சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்த பார்வை 5-ல் காணும் வழக்கு எண். W.P.No.16129 of 2023 ஆனது 24.05.2023 அன்று அவசர வழக்காக சென்னை, உயர்நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, வழங்கப்பட்ட தீர்ப்பாணையில், அத்தீர்ப்பாணையின் நகல் கிடைக்கப்பெற்ற 5 மாதங்களுக்குள்ளாக தனியரது மனுவின் மீது உரிய முடிவினை எடுக்குமாறு முதல் எதிர் மனுதாரரான உயர்கல்வித் துறையின் முதன்மைச் செயலாளருக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

3. பார்வை ஆறில் காணும் தங்களது கடிதத்தில் தஞ்சாவூர், வல்லம், பெரியார் நூற்றாண்டு பாலிடெக்னிக் கல்லூரியின் முதல்வராகப் பணிபுரியும் முனைவர்.இரா.மல்லிகா அவர்களுக்கு முனைவர் உயர்கல்வி பட்டம் பெற்றமைக்காக, 03.01.2008 முதல் மூன்று முன்னூதிய உயர்வுகள் 24.02.2011 நாளிட்ட தொழில்நுட்பக் கல்வி இயக்குநரின் செயல்முறை ஆணையின்படி வழங்கப்பட்டது என்றும், இந்நிலையில் 04.01.2016 நாளிட்ட அகில இந்திய தொழில்நுட்பக் குழும (AICTE) தெளிவுரைகளின்படி, ரூ.37400-67000 + AGP ரூ.9000/- என்ற ஊதியக்கட்டில் சம்பளம் பெறும் ஆசிரியப்பணியாளர்களுக்கு முனைவர் பட்டம் பெற்றமைக்கு ஊக்க ஊதிய உயர்வுகள் வழங்கக்கூடாது என தெளிவுரை வழங்கப்பட்டதன் அடிப்படையில், 25.2.2019 நாளிட்ட தொழில்நுட்பக் கல்வி இயக்குநரின் செயல்முறை ஆணையின்படி, தனியருக்கு Ph.D., உயர்கல்வித் தகுதிக்காக முன்னரே வழங்கப்பட்ட மூன்று முன்னூதிய உயர்வுகள் ரத்து செய்யப்பட்டு, தனியருக்கு வழங்கப்பட்ட பணப்பயன்களை திரும்ப செலுத்த வேண்டும் என்று ஆணை வழங்கப்பட்டது என்றும், மேற்காணும் ஆணையின் அடிப்படையில் தனியருக்கு வழங்கப்பட்ட மூன்று முன்னூதிய உயர்வுகளுக்கான பணப்பலன்களை முனைவர் இரா. மல்லிகா, அவர்களிடமிருந்து திரும்ப பெறப்பட்டு

செலுத்தப்பட்டுள்ளதாகவும், இந்நிலையில் 20.05.2020 நாளிட்ட அகில இந்திய தொழில்நுட்பக் குழும அறிவிக்கையில் (AICTE Notification), வரிசை எண்.4-ல் வழங்கப்பட்ட தெளிவுரையில் ரூ.37400-67000 + AGP ரூ.9000 என்ற ஊதியக்கட்டில் சம்பளம் பெறும் ஆசிரியப்பணியாளர்களுக்கு முனைவர் பட்டம் பெற்றமைக்கு ஊக்க ஊதிய உயர்வுகள் வழங்கக்கூடாது என வழங்கப்பட்ட தெளிவுரை 04.01.2016-க்குப் பின்னர் முனைவர் (Ph.D.,) பட்டம் பெற்றவர்களுக்கு மட்டுமே பொருந்தும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில், முனைவர் ஆர். மல்லிகா, முதல்வர் அவர்கள், 02.01.2008 அன்று முனைவர் பட்டம் பெற்றுள்ளதால், அன்னாருக்கு வழங்கப்பட்ட மூன்று ஊக்க ஊதிய உயர்வுகளை ரத்து செய்த ஆணையை மறுபரிசீலனை செய்யவும், முன்னூதிய உயர்வு ரத்து செய்யப்பட்டதால் திரும்ப செலுத்தப்பட்ட பணப்பலன்களை மீள பெறவும் அக்கல்லூரி முதல்வரால் கோரப்பட்டது என்றும், தஞ்சாவூர் பெரியார் நூற்றாண்டு பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர் முனைவர் ஆர். மல்லிகா, 04.01.2016க்கு முன்னர், அதாவது 02.01.2008 அன்று முனைவர் பட்டம் கல்வித்தகுதி பெற்றதன் அடிப்படையில், ஏற்கனவே 03.01.2008 முதல் வழங்கப்பட்ட மூன்று ஊக்க ஊதிய உயர்வுகளை இரத்து செய்து ஆணை வழங்கப்பட்டதை, தற்போது, 20.05.2020-ம் நாளிட்ட அகில இந்திய தொழில்நுட்பக் குழும நெறிமுறைகள் (AICTE Notification), அடிப்படையில், தனியருக்கு 03.01.2008 முதல் முனைவர் பட்டம் பெற்றமைக்காக வழங்கப்பட்ட மூன்று முன்னூதிய உயர்வுகளை மீண்டும் வழங்கலாமா என்பது குறித்த தெளிவுரையை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

4. மேற்கண்ட சென்னை, உயர்நீதிமன்ற ஆணை மற்றும் தொழில்நுட்பக் கல்வி ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, தொழில்நுட்பக் கல்வித் துறையில் Ph.D., பட்டம் பெற்ற அரசு மற்றும் அரசு உதவிபெறும் பாலிடெக்னிக் கல்லூரியில் பணிபுரியும் / ஓய்வுபெற்ற முதல்வர்களுக்கு மூன்று முன் ஊக்க ஊதிய உயர்வுகள் வழங்குவது குறித்து பின்வரும் தெளிவுரைகள் வழங்கப்படுகின்றன.:-

| வ. எண். | Ph.D., பட்டத்திற்கான முன் ஊக்க உயர்வு வழங்குவது குறித்து / தங்களால் கோரப்பட்ட விவரங்கள் | தெளிவுரைகள் |
|---|---|---|
| 1. | அரசு பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர் பதவிக்கு Ph.D., பட்டம் கட்டாய கல்வித் தகுதியாக அரசாணை நிலை எண். 111. உயர்கல்வி (சி2) த் துறை, நாள் 25.05.2010-ல் ஆணை வெளியிடப்பட்டு அதற்கான விதித் திருத்தங்களும் 25.05.2010 முதல் நடைமுறைக்கு வருமென தெரிவிக்கப் பட்டுள்ளதாலும், அரசு கடித நிலை எண். 257, உயர்கல்வித்(சி2)துறை, நாள் 05.10.2023-ல் அரசாணை (நிலை) எண். 95, உயர்கல்வி (சி2)த் துறை, நாள் 05.05.2010 வெளியிடப்படுவதற்கு முந்தைய நாளான 04.05.2010 வரை Ph.D. பட்டம் பெற்ற அரசு மற்றும் அரசு உதவி பெறும் பொறியியல் கல்லூரி இணைப்பேராசிரியர்கள் / பேராசிரியர்கள் மற்றும் முதல்வர் பதவிகளில் பணிபுரிவோர் மற்றும் ஓய்வுப் பெற்றோர்களுக்கு மூன்று முன் ஊக்க ஊதிய உயர்வுகள் வழங்கி ஆணையிடப்பட்டுள்ளதாலும், அதனைப் போன்றே **அரசாணை (நிலை) எண்.111, உயர்கல்வி (சி2) த் துறை, நாள் 25.5.2010 வெளியிடப்பட்ட நாளுக்கு முந்தைய நாளான 24.05.2010 வரையில் Ph.D., பட்டம் பெற்ற அரசு மற்றும் அரசு உதவிபெறும் பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர் பதவியில் பணிபுரிவோர் மற்றும் ஓய்வு பெற்றோர்களுக்கு மூன்று முன் ஊக்க** ஊதிய உயர்வுகளை வழங்கலாம். | 24.05.2010 வரை (அதாவது அரசாணை நிலை எண். 111. உயர்கல்வி (சி2) த் துறை, நாள் 25.05.2010 வெளிவருவதற்கு முன்) Ph.D., பட்டம் பெற்ற அரசு பாலிடெக்னிக் கல்லூரி மற்றும் அரசு உதவிபெறும் பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர்களுக்கு 3 முன் ஊக்க ஊதிய உயர்வுகள் வழங்கியுள்ள நிலையில், அத்தகையோருக்கு 01.01.2006 ஆறாவது ஊதியக்குழுவின்படி ஊதிய நிர்ணயம் செய்யப்பட்டு திருத்திய ஊதிய விகிதம் 01.01.2006 முதல் கருத்தியலாகவும், 01.01.2007 பணப்பயனுடன் ஊதிய நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதால், அத்தகையோரிடம் 3 ஊக்க ஊதிய உயர்வுக்கான தொகையினை பிடித்தம் மேற்கொள்ளாமலும், பிடித்தம் மேற்கொள்ளப்பட்டிருந்தால் அத்தொகையை தனியருக்கு ஒப்பளிப்பு செய்து, பின்பு Ph.D.,க்கான முன் ஊக்க ஊதிய உயர்வுகள் வழங்கப்பட்ட நாளிலிருந்தே (Ph.D.,-க்கு வழங்கப்பட்ட முன் ஊக்க ஊதிய உயர்வினை நீக்கி) மறு ஊதிய நிர்ணயம் செய்யலாம். |

| | | |
|---|---|---|
| 2. | பெரியார் நூற்றாண்டு பாலிடெக்னிக் கல்லூரியில் முதல்வராக பணிபுரிந்து வரும் முனைவர் ஆர்.மல்லிகா என்பவர் 02.01.2008 அன்று முனைவர் பட்டம் பெற்று விட்ட நிலையில் (அதாவது 24.05.2010-க்கு முன்பாக) தனியருக்கு 03.01.2008 முதல் முனைவர் பட்டம் பெற்றமைக்காக வழங்கப்பட்ட மூன்று முன்னூதிய உயர்வுகளை மீண்டும் வழங்குவதுடன், முன்னூதிய உயர்வு ரத்து செய்யப்பட்டதால் திரும்ப அரசு கணக்கில் செலுத்தப்பட்ட பணப் பலன்களை மீளவும் தனியருக்கு ஒப்பளிக்கலாம். | தனியருக்கு முனைவர் பட்டம் பெற்றமைக்காக வழங்கப்பட்ட மூன்று முன்னூதிய உயர்வு ரத்து செய்யப்பட்டதால் திரும்ப அரசு கணக்கில் செலுத்தப்பட்ட ரூ.1605713.92/-னை மீளவும் தனியருக்கு ஒப்பளிக்குமாறும், மேலும், முனைவர் ஆர்.மல்லிகா என்பவர் 03.01.2008 அன்று முனைவர் பட்டம் பெற்றமைக்காக வழங்கப்பட்ட மூன்று முன்னூதிய உயர்வுகளை ரத்து செய்து, மறு ஊதிய நிர்ணயம் செய்யலாம். |

5. இக்கடிதம் நிதித் (கல்வி - I) துறையின் இசைவுடன் E-file No.4413/சி1/2021, நாள் 05.01.2024-ன்படி வெளியிடப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

தி. திலோத்தமா
10/01/2024

அரசு முதன்மைச் செயலாளருக்காக.

நகல்

அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும்
பாலிடெக்னிக் கல்லூரிகளின் முதல்வர்கள்
(தொழில்நுட்பக் கல்வி ஆணையர் வழியாக)
சம்பந்தப்பட்ட கருவூல அலுவலகங்கள்
(தொழில்நுட்பக் கல்வி ஆணையர் வழியாக)
நிதித் (கல்வி - I) துறை, சென்னை - 9.
இ.கோ / உதிரி.